செய்தி வெளியீடு எண் : 213 நாள் : 01.02.2023

<u>செய்தி வெளியீடு</u>

**“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ்**
**வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட காவல்துறை உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாவட்டங்களுக்குச் சென்று நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற புதிய திட்டத்தின் கீழ் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்வதற்காக இன்று (1.2.2023) வேலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.

அதைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டம், காட்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், **பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் 2400 கோடி ரூபாய் நிதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு மூலம் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான **குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை** தொடங்கி வைத்து, வேலூர் மாவட்டத்தில் 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 15 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 114 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர், மாலை விஐடி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாணவர் விடுதி மற்றும் பேர்ல் ஆராய்ச்சிக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

அதனையடுத்து, வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை, மாவட்ட காவல்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த மண்டல ஆய்வு என்பது மாநிலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு முன்னோடித் திட்டம் என்றும், இத்திட்டம் வெற்றி பெற்றால் நீங்களும் வெற்றி பெறுவீர்கள், உங்களுடன் சேர்ந்து நானும் வெற்றி பெறுவேன், நம்முடைய உழைப்பில் இந்த மாநிலமே வெற்றி பெறும் என்றும் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது, புலனாய்வு செய்வது, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது ஆகிய மூன்றும் காவல்துறையின் மூன்று தூண்கள் என்றும், இப்பணிகளில் அதிக பளு இருக்க கூடாது என்றால், அதற்குக் குற்றங்களை முன்கூட்டியே தடுப்பது மிக முக்கியம் என்றும், அந்த அடிப்படையில் “Preventive policing” என்பது காவல்துறையின் இதயமும், ஆன்மாவும் போன்றது என்று

குறிப்பிட்டார். இதில் அனைத்து நிலை காவல் அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

காவல்துறை அதிகாரிகள் வழக்கிற்காக மட்டும் போகாமல், சாதாரணமாக அவ்வப்போது கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் பேச வேண்டும், இதைச் செய்தாலே, சட்டம் ஒழுங்கு பிரச்சினை கிராமங்களில் வராது என்றும், இப்படி செய்தால் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய சூழலும் எழாது என்று குறிப்பிட்டு, மக்கள் - காவல்துறை சந்திப்புகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும், இளைஞர்கள் - பள்ளி - கல்லூரி மாணவர்களையும் சந்தித்துப் பேசி, சட்டத்தின் ஆட்சி இளைஞர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்று எடுத்துக்கூறி, அவர்களை இளம் பருவத்திலேயே குற்றச் செயல்கள் பக்கம் போகமல் தடுத்திட முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

விளிம்பு நிலை ஏழை எளிய மக்கள், பெண்கள், உங்கள் உதவி தேடி வரும்போது அவர்களுக்கு துணையாக இருந்து நீதி பெற்றுத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

எப்.ஐ.ஆர் போட்டு விட்டால் மட்டுமே பிரச்சினை தீராது. அவற்றில் குற்றப்பத்திரிகையை விரைவில் தாக்கல் செய்து வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர வேண்டும். அப்போதுதான் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு அச்சம் வரும். இந்த ஆட்சியில் தப்பு செய்தால் தப்பிக்க முடியாது என்ற பயம் வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், குற்றங்கள் ஆகிய வழக்குகளில் தீவிர கவனம் செலுத்தவும், போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மிகக் கடுமையாக எடுக்கவும் அறிவுறுத்தினார்.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பின் போது வருவாய்த்துறையினருடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும், விழிப்புணர்வு பணிகளில் மாவட்ட ஆட்சியரோடு இணைந்து பணிகளை மேற்கொள்வதன் மூலம் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள இயலும் என்றும் தெரிவித்தார்.

காவல்துறை என்ற குடும்பத்தில் மாவட்டத்தின் எஸ்.பி.தான் தலைவர் என்ற நினைப்பில் செயல்பட வேண்டும் என்றும், தங்களுக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் நிம்மதியாக, நேர்மையாகப் பணியாற்ற வழி செய்தாலே மாவட்டத்தில் அமைதி நிலவும். சட்டத்தின் ஆட்சி எவ்வித சிரமும் இன்றி நிலைநாட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

எனவே, முதலில் குறிப்பிட்டதைப் போல காவல்துறையின் மூன்று தூண்களையும் கட்டிக் காப்பாற்றினாலே உங்கள் மாவட்டம் சிறக்கும், இந்த மண்டல ஆய்வின் நோக்கமும் வெற்றி பெறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அமர் குஷ்வாஹா, இ.ஆ.ப., இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., வடக்கு மண்டல காவல் துறை தலைவர் டாக்டர் என். கண்ணன், இ.கா.ப., வேலூர் சரக காவல் துணை தலைவர் டாக்டர் எம்.எஸ். முத்துசாமி, இ.கா.ப., வேலூர் மாவட்ட

காவல் கண்காணிப்பாளர் திரு. எஸ். ராஜேஷ் கண்ணன், இ.கா.ப., இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபா சத்யன், இ.கா.ப., திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கே. கார்த்திகேயன், இ.கா.ப., திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கே.எஸ். பாலகிருஷ்ணன், இ.கா.ப., காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in